


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.3.2025) எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அகில இந்திய காவல்துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தின் (AIPSCB) சார்பில் நடைபெற்ற 25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் மற்றும் காவலர்களுக்கு பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் /காவல்படைத் தலைவர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர் / தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் சந்தீப் ராய் ரத்தோர், அகில இந்திய காவல் விளையாட்டு கட்டுப்பாட்டு குழும தலைவரின் பிரதிநிதி மற்றும் நுண்ணறிவுப் பிரிவு சிறப்பு இயக்குநர் பிரவீன் குமார், காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) முனைவர் இரா. தினகரன், கூடுதல் காவல் ஆணையர் (தெற்கு) முனைவர் என்.கண்ணன், மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கூடுதலாக 1000 திருக்கோயில்கள் இணைப்பு!

# விரிவுப்படுத்தப்பட்ட ஒருகால பூஜைத் திட்டத் திருக்கோயில்களுக்கான ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச்.22-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.03.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 17,000 திருக்கோயில்களுக்கான வைப்பு நிதியினை தலா 2.50 இலட்சம் ரூபாயாக உயர்த்திட 85 கோடி ரூபாய் மற்றும் இத்திட்டத்தை விரிவுப்படுத்தும் வகையில் கூடுதலாக 1,000 திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 25 கோடி ரூபாய், என மொத்தம் 110 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் தலைமை நிதி அலுவலர் திருமதி பீ. ஜமீலா அவர்களிடம் வழங்கினார். மேலும், விரிவுபடுத்தப்பட்ட 1,000 ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களுக்கு அதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களிடம் ஆணைகளை வழங்கினார்.

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “12,959 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தை செயல்படுத்த ரூ.130 கோடி நிலை நிதி ஏற்படுத்தப்படும்“ என அறிவிக்கப்பட்டது. அதன்படி, ஒருகால பூஜை நடைபெறும் 12,959 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே வைப்பு நிதியாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் வழங்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் ரூபாயை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அரசு மானியமாக ரூ.130 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டது.

மேலும், 2022-2023 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 2,000 திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அரசு மானியமாக 40 கோடி ரூபாய்க்கான காசோலை மற்றும் 2023-2024 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 2,000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு அரசு மானியம் மற்றும் பொது நல நிதியாக ரூ.40 கோடிக்கான காசோலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், “ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 17,000 திருக்கோயில்களின் வைப்புத் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இவ்வாண்டு 1000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.110 கோடி அரசு நிதியாக வழங்கப்படும். ஏற்கனவே, 17,000 திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகை ரூ.1000/- இவ்வாண்டு கூடுதலாக சேர்க்கப்படும் 1000 திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கும் வழங்கப்படும்“என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், ஒருகால பூஜை திட்டத்தில் உள்ள 17,000 திருக்கோயில் களுக்கு உயர்த்தப்பட்ட வைப்பு நிதிக்காக 85 கோடி ரூபாய், இத்திட்டத்தை விரிவுப்படுத்திடும் வகையில் 1,000 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதியாக 25 கோடி ரூபாய், என மொத்தம் அரசு மானியமாக 110 கோடி ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் தலைமை நிதி அலுவலர் அவர்களிடம் வழங்கினார். மேலும், விரிவுபடுத்தப்பட்ட ஒரு காலபூஜைத்திட்டத்திருக்கோயில்களுக்கு அதற்கான ஆணைகளை அர்ச்சகர்களிடம் வழங்கினார்.

ஒரு கால பூஜைத் திட்டத் திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் பிள்ளைகளின் நலன்கருதி, அவர்களின் மேற்படிப்பிற்கு கல்வி உதவித்தொகையாக கடந்த 2 ஆண்டுகளில் 900 மாணவர்களுக்கு தலா 10,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, இணை ஆணையர் பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்டம் — கொளத்தூர் தொகுதியில்

# முதல்வரின் மனிதநேய விழா - அறிவுக்களம் - வினாடி-வினா!

## சன் நியூஸ் தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் துவக்கி வைக்கிறார்! இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் ஆனிராஜா பரிசு வழங்குகிறார்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை, மார்ச்.22-*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக கொளத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 32, 32ஆ, “தளபதி 72 அறிவு களம்” எனும் தலைப்பில் வினாடி வினா போட்டி குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மற்றும் இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் “தளபதி 72 அறிவு களம்” எனும் மாபெரும் வினாடி வினா போட்டி நடைபெற உள்ளது. திராவிட இயக்க வரலாறு, திராவிட இயக்க அரசியல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, திட்டங்கள், தளபதி அவர்களின் பொது வாழ்க்கை, அவர் மக்களுக்காற்றிய தொண்டு, தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்த நலத் திட்டங்கள் என ஒட்டுமொத்த திராவிடக் களஞ்சியத்தின் திராவிடச் சுடரைத் தேர்ந்தெடுக்கும் “மாபெரும் அறிவுத்திருவிழாவாக” நடைபெறும் இப்போட்டி இணையவழியாக மார்ச் 3 முதல் 12 வரை நடைபெற்று 22.03.2025 அன்று அரையிறுதியும், 23.03.2025 அன்று இறுதிப் போட்டியும் சென்னை கொளத்தூரில் மிக பிரமாண்டமாக நடைபெறுகிறது.*

*இவ்வினாடி வினா நிகழ்ச்சியின் முதல் நாள் போட்டியை சன்நியூஸ் தலைமை ஆசிரியர் மு.குணசேகரன் அவர்கள் துவக்கி வைத்து நிகழ்ச்சியை கண்டு மகிழ்கிறார்.*

*இரண்டாம் நாளில் நடைபெறும் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ஆனி இராசா அவர்கள் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.*

*மேலும், இந்த அறிவுக்களம் வினாடி வினா நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.எ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், இரா.விடுதலை, பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: கே. சந்துரு, சி.மகேஷ்குமார். மாவட்ட து.செயலாளர் தேவஜவகர் பொதுக்குழு உறுப்பினர்கள்: சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர் செல்வம்,*

*மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: துரை கண்ணன், அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக் எஸ்.தனசேகர். மாமன்ற உறுப்பினர்கள்: சி.ஸ்ரீதணி, என்.தாவூத் பீ. டி.யோகப்பிரியா, பி. அமுதா. கே.சாரதா. பகுதி நிர்வாகிகள் : பி.பழனி, இரா.இளங்கோவன், எஸ். கே.ரமேஷ், எல்.டி.தாமஸ். இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி.*

*வட்ட கழக செயலாளர்கள்: பா.அன்பரசு, டி.சந்திரசேகர், கே.ஜார்ஜ்குமார், என்.பொன்முடி பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, பி.டி.சி.எஸ்.ரவி. எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என். இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

### ரத்னா லோகேஸ்வரன் எம்.சி. தலைமை! மு.ராசா — கே.கண்ணன் முன்னிலை!

# சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் முதல்வர் பிறந்தநாள் நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் — அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் — சே.மெ.மதிவதனி சிறப்புரை!

*சென்னை, மார்ச் 22-*

*சென்னை தெற்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநில மகளிர் அணி சமூக வலைத்தள பொறுப்பாளரும், விருகம்பாக்கம் 128வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ரத்னா லோகேஷ்வரன் தலைமையில் நடைபெற்றது.*

*விழாவில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள், 10 பேருக்கு தையல் இயந்திரம், சலவை பெட்டி, மாற்றுத்திறனாளிக்கு 3 சக்கர மிதி வண்டிகள் வழங்கப்பட்டது.*

*நிகழ்ச்சிக்கு பகுதி கழக செயலாளர்கள் மு.இராசா, கே.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*மனிதவள மேலாண்மை துறை அமைச்சரும், கழக மகளிர் அணி துணை செயலாளருமான என்.கயல்விழி செல்வராஜ், திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் சே.மெ. மதிவதனி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.*

*இந்நிகழ்வில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிராபகர்ராஜா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்தரமேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், மண்டல குழு தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் எஸ்.டி.தங்கராசன், மாவட்ட துணை செயலாளர்கள் வாசுகி பாண்டியன், பாலவாக்கம் த.விசுவநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை அன்பரசன், எஸ்.ஏ. ஹரிகிருஷ்ணன், வட்ட கழக செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வீ.ஏ.ராஜா, பொன். லோகு, எஸ்.மைக்கேல், எஸ். பாஸ்கரன், ஆர்.பாபு, மாவட்ட பிரதிநிதிகள் வி.ச. சங்கரன், டி.எஸ்.பி.தென்னரசு, அர.அ.எழில்வாணன்,*

*சொ.விஜயகுமார், ச.ரா. சீனிவாசன், ஆர்.டி.நல்லேந்திரன், கே.பாலமுருகன், அ.ஸ்ரீதர், எஸ்.சண்முகநாதன் அணிகளின் அமைப்பாளர்கள் நிஷாசையத், பா.அருண்குமார், நா.மணிகண்டன், சி.பரிமேழகன், எம்.பார்த்திபன், மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர்கள் பாலவாக்கம் கலைச்செல்வி, வேளச்சேரி லதா, விஜயலட்சிமி, பூங்குழலி, பகுதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் சா.நாகராசன், எஸ்.விஜயகுமார், பி.விஜயலட்சுமி, து. ரஞ்சித்குமார், டி.தியாக ராஜன், ஆர்.பிரகாஷ், சே.முருகன், வி.சிவஜோதி, என்.இந்திராணி, என்.வடிவேல், என். ஜி.எஸ்.மூர்த்தி, ஆ.பால்பாண்டியன், பி.பிலிப்ம கேஸ்வரன், ஜேம்ஸ்முருகன், வீரா.ஏகாம்பரம், வி.கே.செந்தில்குமார்,*

*இளங்கோவன், இரா. வேம்புலி, வே.குமார், வி.ச. கணேசன், கா.சு ரேஷ்குமார், ஆ.கௌதம், மு.ரியாஸ்தீன், எஸ். அருள்மைக்கேல், டி.சிவக்குமார், என்.ரவி, டி.ரமேஷ் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ந.மணிகண்டன், ஆடியோ எஸ்.முருகன், ஃபஹது ஜஹாங்கிர், மகளிர் அணி நிர்வாகிகள் மல்லிகா, ரோசி ஜானகிராமன், சாந்தி, ரேவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

*இறுதியாக ஆர்.விஜயலட்சுமி, எம்.பூங்குழலி நன்றி தெரிவித்தனர்.*



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் கடமலைப்புத்தூரில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இந்தி திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் கண்ணன், சிவக்குமார் ஏற்பாட்டிலும் நடைபெற்ற கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு பேசினார். உடன் க. செல்வம் எம்.பி. , கோகுலக்கண்ணன், பொன்மலர் சிவக்குமார், நிர்வாகிகள் ஜியாவுதீன், எழிலரசன், ரங்கநாதன், சம்பத் வெங்கா, வீரராகவன், வசந்தா, மாலதி, நந்தினி கரிகாலன், ஆகியோர் உள்ளனர்.



சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநில மகளிர் அணி சமூக வலைத்தள பொறுப்பாளரும், விருகம்பாக்கம் 128வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ரத்னா லோகேஷ்வரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பகுதி கழக செயலாளர்கள் மு.இராசா, கே.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.